மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.10/2023
அ.வ.எண்.23/2014

1. கண்ணுபையன் (இறந்துவிட்டார்)
2. மகாலிங்கம் ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. மலர்விழி
2. அறிவுக்கரசன்
3. அரவிந்தன்
4. கண்காணிப்பு பொறியாளர்,
O & M தமிழ்நாடு மின்சாரவாரியம்,
மேட்டூர் அணை.

5. செயற் பொறியாளர்,
O & M தமிழ்நாடு மின்சாரவாரியம்,
மேட்டூர் அணை.

6. உதவி செயற் பொறியாளர்,
O & M தமிழ்நாடு மின்சாரவாரியம்,
மேட்டூர் அணை.

7. உதவிப் பொறியாளர்,
O & M தமிழ்நாடு மின்சாரவாரியம்,
குஞ்சாண்டியூர்.

8. நல்லம்மாள்
9. ஆண்டியப்பன்
10. காமராஜ் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 18.07.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.K.சத்தியபிரியா அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.G.மாலதி அவர்கள் ஆஜராகியும், 3, 8 முதல் 10 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாகவும், 4 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.ஹரிநாராயணன் அவர்கள்

ஆஜராகியும், 4 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆவண எண்கள்.6, 15 தவிர்த்து மற்ற ஆவணங்களை ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்ய வேண்டுகிறேன் என்றும், எதிருரை இல்லை என்றும் மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151 ன் கீழ் இம்மனுவில் கண்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

மனுதாரர்களால் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்து கட்டளை பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாவா செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு ஆதரவாக உள்ள கிரயப்பத்திரங்களின் பதிவு நகல்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றது. மேற்படி காலதாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே இம்மனுவில் கண்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனு பொய்யானதும், சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்களால் தாக்கல் செய்ய உத்தேசித்திருக்கும் ஆவணங்கள் அனைத்தும் சான்றிட்ட நகல்கள் என்பதால் அவற்றை சாட்சியமாக ஏற்க இயலாது. மேலும் மாதிரி வரைபடத்திற்கு சாட்சியமதிப்பு இல்லை. மனுதாரர்கள் எதனால் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்வதற்கு காலதாமதம் ஏற்பட்டது என்பது குறித்து எவ்வித காரணமும் கூறவில்லை. எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 2 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு ஆதரவாக உள்ள கிரயப்பத்திரங்களின் பதிவு நகல்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்றும் மேற்படி காலதாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே இம்மனுவில் கண்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய உத்தரவிடக் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களால் தாக்கல் செய்ய உத்தேசித்திருக்கும் ஆவணங்கள் அனைத்தும் சான்றிட்ட நகல்கள் என்பதால் அவற்றை சாட்சியமாக ஏற்க இயலாது என்றும், மேலும் மாதிரி வரைபடத்திற்கு சாட்சியமதிப்பு இல்லை என்றும், மனுதாரர்கள் எதனால் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்வதற்கு காலதாமதம் ஏற்பட்டது என்பது குறித்து எவ்வித காரணமும் கூறவில்லை. எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 2 எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளது தெரியவருகிறது. மேலும் 4 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆவண எண்கள்.6, 15 ஆகியவற்றை தவிர மற்ற ஆவணங்களை குறியீடு செய்ய ஆட்சேபணை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iii) மேற்கண்ட இருதரப்பு வாதங்களையும் கருத்தில் கொள்கையில், ஒரு வழக்கில் ஆவணத்தை குறியீடு செய்யும் சமயத்தில், மேற்படி ஆவணத்தின் சாட்சிய மதிப்பு குறித்து நீதிமன்றம் பரிசீலிக்க தேவையில்லை எனவும், வழக்கில் இறுதி தீர்ப்புரை பகரப்படும் சமயத்தில் மேற்படி ஆவணத்தின் சாட்சிய மதிப்பு நீதிமன்றத்தால் கருத்தில்

கொள்ளப்படும் என்றும், மேலும், விசாரணை நீதிமன்றத்தில் தான் ஆவணத்தை தாக்கல் செய்து தரப்பினர் சாட்சியம் அளிக்கவும், அது குறித்து எதிர்தரப்பினர் குறுக்கு விசாரணை செய்யவும் வாய்ப்பு வழங்க முடியும் என்பதாலும், எதிர் உரையில் கூறியுள்ள சங்கதிகள் குறித்து ஆவணத்தை ஏற்றுக்கொள்ளும் போது முடிவு செய்ய இயலாது என்பதால் 1, 2 எதிர்மனுதாரர்களின் கட்சி ஏற்புடையதல்ல எனவும், இம்மனு அனுமதிக்கதக்கது எனவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அதே சமயத்தில் ஆவணங்கள் 6, 15 ஆகியவை ஜெராக்ஸ் நகல்கள் என்பதால் மேற்படி ஆவணங்களை சாட்சியங்களாக குறியீடு செய்ய இயலாது என 4 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி இரண்டு ஆவணங்களை பொருத்து, அதை குறியீடு செய்யும் சமயத்தில் எதிர்தரப்பினரின் ஆட்சேபணைகள் பரிசீலிக்கப்படும் என தீர்மானித்து இம்மனு அனுமதிக்கப்படுகிறது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு ஆவணங்களை ஏற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.08.04 19:03:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.08.04 19:03:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.